<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2008–2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் சுற்றுலா பயணிகள் உபயோகத்திற்கு ரூ.2.10 இலட்சம் செலவில் கழிப்பறை தொகுதி கட்டும் திட்டம் – நிலை நிதிக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ப்பி2) துறை

அரசாணை (நிலை) எண். 139 நாள் 21.5.2008

வைகாசி 8, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண்.OT4/AE4/Part II/2008–09/2007, நாள் 11.1.2008
2. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை கடிதம் எண். எப்2/பகுதி II திட்டங்கள் 2008–2009, நாள் 21.4.2008

––––––

<u>ஆணை:</u>

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் சுற்றுலா பயணிகள் உபயோகத்திற்கு ரூ.2.10 இலட்சம் செலவில் கழிப்பறை தொகுதி கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்துடன் பெறப்பட்ட மேற்கண்ட திட்டம் குறித்த விளக்கக் குறிப்பில், தமிழகத்தின் பெரிய அணைகளுள் ஒன்றான மணிமுத்தாறு அணை 5511 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டதாகும் என்றும், இவ்வணை மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீர் பெறுகிறது என்றும், இவ்வணை திருநெல்வேலியிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் கோவில் நகரமான பாபநாசத்திற்கு அருகே அமைந்துள்ளது என்றும், மிகவும் பிரபலமான அருவிகள் நகரங்களான குற்றாலமும், கன்னியாகுமரியும் முறையே சுமார் 60 கிலோ மீட்டர் மற்றும் 100 கிலோ மீட்டர் தொலையில் உள்ளன என்றும், இந்த அணையின் மேற்புறம் சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு வரும் சுற்றுலா பயணிகள், இந்த அணையையும் பார்வையிட வருகிறார்கள் என்றும், ஆண்டுதோறும் 50,000 சுற்றுலா பயணிகள் மணிமுத்தாறு அணையைக் காண வருகின்றனர் என்றும், அணைக்கு அருகே கழிப்பறை வசதி இல்லாததால், திறந்த வெளி இடத்தையே கழிப்பிடமாக அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பதால், தற்போது, ஆண்கள் உபயோகத்திற்கு இரண்டு கழிப்பறைகள் மற்றும் பெண்கள் உபயோகத்திற்கு இரண்டு கழிப்பறைகள் என மொத்தம் நான்கு கழிப்பறைகள் கொண்ட கழிப்பிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தின் மதிப்பு 2008–2009 ஆம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ.2.10 இலட்சம் ஆகும் என்றும் மற்றும் இத்திட்டம் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது என்றும் நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட திட்டத்தினை 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் சுற்றுலா பயணிகள் உபயோகத்திற்கு ரூ.2.10 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செலவில் கழிப்பறை தொகுதி கட்டும் திட்டத்திற்கு 2008–2009–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4701 பெரிய நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு 03 நடுத்தர பாசனம் – வணிகத்தன்மை வாய்ந்தது –315 தமிழ்நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களிலும் அவற்றை சுற்றிலுமுள்ள பூங்காக்களை மேம்படுத்தலும் அழகுபடுத்தலும் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II– மாநிலத் திட்டம் JB– திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு அணைக்கட்டுப் பகுதியில் கழிவறை கட்டிடம் கட்டுதல் 16 பெரும் பணிகள்" (து.தொ.கு. 4701–03–315 –JB –1600)''.

5. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.26433/பொ.ப. II/2008, நாள் 8.5.2008ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை 2.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி
மாநில கணக்காயர், சென்னை.18
நகல்
நிதி (பொ.ப. II / வ.செ.II) துறை, சென்னை.9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை–9 (5 நகல்கள்).
இ.கோ /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்